# தரம் –12

# "GEO" Published

22 T II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2020 ஆவணி

General Certificate of Education (Adv. Level) Examination, August – 2020

## 2ம் தவணை மாதிரிப் பரீட்சை–2021

புவியியல் - II
Geography - II

Teacher:-
M.Sujinthan, BA(Hons) Spl.Geo

மூன்று மணித்தியாலங்கள்
Three Hours

**அறிவுறுத்தல்கள்:–**

* ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களிற்கு மாத்திரம் விடை எழுதுக

### பகுதி I – பௌதிகப் புவியியல்

**1.**

*(i)* **"வளிமண்டலம்"** என்றால் என்ன என்பதை சுருக்கமாக குறிப்பிட்டு சேர்க்கையின் அடிப்படையில் அங்கு காணப்படும் **நிரந்தரமான** வாயுக்கள் **மாறுபடும்** வாயுக்களை குறிப்பிடுக ? (4 புள்ளிகள்)

*(ii)* புவியின் உட்பாக ஆய்வின் அடிப்படையில் (இயல்பு அடிப்படையில்) அதன் **பிரதான படைகளையும்** புனையா வரைபடத்துடன் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (5 புள்ளிகள்)

*(iii)* புவியின் கற்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம், உயிர்க்கோளம் ஆகியவற்றில் இடம்பெறுகின்ற இயற்கையான தோற்றப்பாடுகள் இவ்விரண்டு குறிப்பிட்டு அவற்றினை சுருக்கமாக விபரிக்குக?. (5 புள்ளிகள்)

*(iv)* நீர் கோளம் மாசடைந்து செல்வதற்கான பௌதிக மானிடக் காரணிகள் **இவ்விரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக ? (6 புள்ளிகள்)

**2.**

*(i)* உருவாக்கத்தின் அடிப்படையில் (தோற்றத்தின்) பாறைகளின் மூன்று வகைகளையும் குறிப்பிட்டு அவற்றின் **உருவாக்கச் செயன்முறைகளை** சுருக்கமாக விளக்குக? (4 புள்ளிகள்)

M.SUJINTHAN

***(ii)*** தொல் காலப் பாறைகளை மையமாகக் கொண்டு இலங்கை பாறைகளின் மூன்று பிரதான பிரிவுகளையும் குறிப்பிடுக.? ஏதாவது ஒன்றினை தெரிவு செய்து அதன் பரம்பல் மற்றும் பண்புகள் **நான்கினை** சுருக்கமாக விவரிக்குக.? (***5*** புள்ளிகள்)

***(iii)*** பாறைகளின் பொருளாதார முக்கியத்துவம் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக? (***5*** புள்ளிகள்)

***(iv)*** இலங்கையின் வடபிரதேசத்திற் சுண்ணக்கற்பாறை வலயங்களின் கீழ்க் காணப்படும் தரைக்கீழ் நீர்வளமானது விரைவாக இழக்கப்பட்டு வருவதற்கான காரணங்களை **ஆராய்க**? (***6*** புள்ளிகள்)

***3.***

***(i)*** உலகின் எரிமலை **வலயங்களினை** உலக புறஉருவப்படத்தில் குறித்து பெயரிடுக? (***4*** புள்ளிகள்)

***(ii)*** எரிமலை செயற்பாட்டினை சுருக்கமாக குறிப்பிட்டு அதன் போது போது **வெளித்தள்ளப்படும் பொருட்களை** குறிப்பிடுக? (***4*** புள்ளிகள்)

***(iii)*** எரிமலை செயற்பாட்டால் தோன்றும் புறத்தள்ளல் நிலவுருவங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு வரைபடங்களின் உதவியுடன் விளக்குக? (***6***புள்ளிகள்)

***(iv)*** எரிமலை வெடிப்பினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் **நான்கினை** உதாரணங்களுடன் குறிப்பிடுக? (***6*** புள்ளிகள்)

***4.***

***(i)*** இலங்கையில் மண்ணரிப்பு துரிதமாக நடைபெறும் மாவட்டங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக? (***4*** புள்ளிகள்)

***(ii)*** மண்ணரிப்பிற்கு ஏதுவான காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக? (***4*** புள்ளிகள்)

***(iii)*** இலங்கையில் மண்ணரிப்பினை இழிவளவாக்கவதற்கு எடக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக? (***6*** புள்ளிகள்)

***(iv)*** மண் மாசடைவிற்கான காரணங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக?(***6*** புள்ளிகள்)

## பகுதி *II* – மானிடப் புவியியல்

***5.***

***(i)*** உலகின் குடித்தொகையின் **இயங்குதன்மையில்** செல்வாக்கு செலுத்தும் காரணிகளைக் குறிப்பிடுக? (***4*** புள்ளிகள்)

***(ii)*** இடப்பெயர்வு என்பதனை வரையறை செய்வதுடன் அவற்றின் **வகைகளை** குறிப்பிடுக?

M.SUJINTHAN

(**4** புள்ளிகள்)

***(iii)*** குடியகழ்வு நாடுகளில் ஏற்படும் விளைவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக?

(**6** புள்ளிகள்)

***(iv)*** உலக குடித்தொகையுடன் தொடர்புடைய பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக? (**6** புள்ளிகள்)

## 6.

***(i)*** சனத்தொகை **அடர்த்தி** என்பதனை சுருக்கமாகக் குறிப்பிடுக (**2** புள்ளிகள்)

***(i)*** ஆபிரிக்கா நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி வதீம் உயர்வாக இருப்பதில் செல்வாக்கு செலுத்தும் **மூன்று** சமூக பொருளாதார காரணிகளை விளக்குக. (**6** புள்ளிகள்)

***(ii)*** ஐரோப்பிய நாடுகளில் மிகக் குறைவான சனத்தொகை வளர்ச்சி வீதம் காணப்படுவதற்குரிய **மூன்று** காரணிகளை விளக்குக? (**6** புள்ளிகள்)

***(iii)*** உலக சனத்தொகையுடன் தொடர்புடைய **மூன்று** பிரச்சனைகளை விளக்குக?

(**6** புள்ளிகள்)

## 7.

***(i)*** குடியிருப்பு என்பதனை **வரைவிரக்கணப்படுத்துக**? (**2** புள்ளிகள்)

***(ii)*** குடியிருப்புக்களின் **பிரதான வகைகளினைக்** குறிப்பிட்டு அவற்றில் ஒன்றின் பண்புகளைக் குறிப்பிடுக? (**6** புள்ளிகள்)

***(iii)*** இலங்கையின் மகாவலி குடியிருப்புக்களின் பண்புகளின் சமூக, பொருளாதார நன்மைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக? (**6** புள்ளிகள்)

***(iv)*** இலங்கையின் குடியிருப்புக்களின் நவீன போக்குகள் **மூன்றினை** குறிப்பிட்டு விளக்குக?

**(6** புள்ளிகள்)

## 8.

***(i)*** **"நகரக்கம்"** என்பதனை தெளிவுபடுத்துக? (**2** புள்ளிகள்)

***(ii)*** வளர்முக நாடுகளில் நகரமட்டம் உயர்வடைவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை **மூன்றினைக்** குறிப்பிடுக? (**6** புள்ளிகள்)

***(iii)*** நகராக்கத்தால் ஏற்படும் சமூக, பொருளாதார சூழல் தாக்கங்கள் **இவ்விரண்டினை** ஆராய்க? (**6** புள்ளிகள்)

***(iv)*** இலங்கையின் நகரமயமாக்கத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் **மூன்றினை** உதாரணங்கள் மூலம் விளக்குக? (**6** புள்ளிகள்)

M.SUJINTHAN